

இணைந்த கணிதம் சுயகற்றல் வழிகாட்டி

[க.பொ.த. உயர்தர கணிதப்பிரிவு மாணவர்களுக்கானது]

வெளியீடு:
கல்வி அபிவிருத்திப் பிரிவு
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்,
மருதனார்மடம்

www.ikedu.lk

நூலைப்பற்றி....

தலைப்பு: **இணைந்த கணிதம் சுயகற்றல் வழிகாட்டி**
(க.பொ.த. உயர்தர கணிதப்பிரிவு மாணவர்களுக்கானது)

மேற்பார்வை: **திரு.சு.சுந்தரசிவம்**
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்,
மருதனார்மடம்.

வழிகாட்டல்: **திரு.ந.காண்டீபன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம், மருதனார்மடம்.

தொகுப்புருவாக்கம்: **திரு.கு.விக்கினரூபன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்)
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம், மருதனார்மடம்.

செவ்வை: **திரு.S.V.மகேந்திரன்**
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்)
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

திரு.மு.இராகுலன்
ஆசிரியர்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

அனுசரணையாளர்கள்: **கல்விக்கான ஓட்டம் நிகழ்ச்சித்திட்டம் (RFE)**
(யாழ். இந்து 1992 உயர்தரப் பிரிவினர்)
ஊடாக
அமரர் திரு. பொ.அன்னலிங்கம் குடும்பத்தினர்

பதிப்புரிமை: **கல்வி அபிவிருத்திப் பிரிவு**
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம், மருதனார்மடம்

பதிப்பு: **ஆகஸ்ட் 2019**

பக்கங்கள்: .....

அச்சுப்பதிப்பு: **எவகிறீன் அச்சகம்**
இல.693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 9893

ISBN No: 978-624-5195-00-8

www.ikeau.lk

வளவாளர் குழாம்

01. **திரு.மு.இராகுலன்** (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
02. **திரு.சி.பிரதீபன்** (ஆசிரியர், யா/யூனியன் கல்லூரி)
03. **திரு.சி.அரிகரன்** (ஆசிரியர், யா/ வயாவிளான் மத்திய கல்லூரி)
04. **திரு.இ.கிருஷ்ணதாஸ்** (ஆசிரியர், யா/அருணோதயக் கல்லூரி)
05. **திரு.கு.பஞ்சலிங்கம்** (ஆசிரியர், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)
06. **திரு.த.துசாந்த்** (ஆசிரியர், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)
07. **திரு.இ.திருக்குமாரன்** (ஆசிரியர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)
08. **திரு.டொமினிக் யூட் நிர்மலன்** (ஆசிரியர், புனித ஹென்றியரசர் கல்லூரி)
09. **திருமதி சு.சிவகுமார்** (ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி)
10. **திருமதி T.சதீஸ்வரன்** (ஆசிரியர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)
11. **திரு. T.குமாரதாசன்** (ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை)
12. **திரு. K.மோகனரஞ்சன்** (ஆசிரியர், யா/யூனியன் கல்லூரி)
13. **அமரர் திரு. V.குமுகேசன்** ((முன்னாள் ஆசிரியர், யா/உடுவில் மகளிர் கல்லூரி)
14. **திரு.த.சத்தியசீலன்** (ஆசிரியர், யா/விக்ரோறியாக் கல்லூரி)
15. **திரு.வி.கஜன்** (ஆசிரியர், யா/யாழ்ப்பாணக் கல்லூரி)
16. **திரு.வீ.சிவாகரன்** (ஆசிரியர், யா/வட்டு இந்துக் கல்லூரி)
17. **திருமதி ச.சுஸாகரன்** (ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)
18. **திரு.செ.மைக்கல் நியூட்டன்** (ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)
19. **திரு.நா.திருக்குமாரன்** (ஆசிரியர், யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்)

www.lkedu.lk

மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவினால் வெளியிடப்படும் க.பொ.த (உ/த) கணிதப்பிரிவு மாணவர்களுக்கான இணைந்த கணிதம் சுயகற்றல் வழிகாட்டி எனும் நூலுக்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந் நூலானது க.பொ.த (உ/த) கணிதப்பிரிவு மாணவர்கள் தமிழ் மொழி மூலத்தில் கற்பதற்குரிய சிறந்த துணை நூலாக அமைவதாலும் வினாக்களுக்குரிய விடைகளும் உள்ளடக் கப்பட்டிருப்பதாலும் அவர்கள் சுயமாகக் கற்றுப் பொதுப்பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு உதவும் என நம்புகின்றேன். இணைந்த கணிதத்தில் மாணவர்களின் பெறுபேற்றினை உயர்த்துவதனை நோக்கமாக கொண்டு இந்நூலானது வலிகாமம் கல்வி வலய மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இந் நூலினை அச்சிடுவதில் நிதி உதவி ஏற்பாடு செய்து தந்த Race for Education நிகழ்ச்சித்திட்ட யாழ் இந்து 1992 உயர்தரப் பிரிவினருக்கும், நிதி உதவியினை வழங்கிய அமரர் பொ.அன்னலிங்கம் குடும்பத்தினருக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாணவர்கள் இதன் மூலம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செ.உதயகுமார்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்,
மருதனார்மடம்.

www.ikeou.lk

வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

க.பொ.த. உயர்தரப் பெறுபேறு என்பது மாணவர்களின் எதிர்காலத்தோடு நெருங்கிய தொடர்புடையது. உயர்தரத்தில் இரண்டு வருட காலக் கற்றலின் விளைவு, பல்கலைக்கழக கற்கைகளுக்கும், ஏனைய உயர் கற்கைகளுக்கும் தெரிவு செய்யப்படும் வாய்ப்பை ஏற்படுத்து வதுடன், பிரகாசமான எதிர்காலத்தையும், சிறந்த தொழில் வாய்ப்பினையும் பெறுவதற்கும் வழி வகுப்பதாக அமைய வேண்டும். அவ்வகையில் கணித, விஞ்ஞானத் துறைகள் விருத்தி செய்யப் பட்டு, மாணவர் வளமும், பெறுபேறுகளும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது.

அதனை நிறைவேற்றும் வகையில் மாணவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்கள் மற்றும் செயன்முறை அனுபவங்கள் ஏற்படுத்தப்படுவது இன்றியமையாததாகும். கணிதத்துறையில் இணைந்த கணிதம் பிரதானமான பாடமாகும். கடந்த வருட க.பொ.த. உயர்தரப் பெறுபேற் றில் இணைந்த கணித பாடத்தில் தேசிய ரீதியில் 66 வீத சித்தி பெறப்பட்டுள்ளது. ஆனால் எமது வலயப் பெறுபேறானது 87 வீதமாகும். இது தேசிய வீதத்தை விட 21 வீதம் அதிகமாகும். இதற் காக உழைத்த ஆசிரியர்கள், வழிகாட்டிய உதவிக் கல்விப் பணிப்பாளர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க.பொ.த உயர்தர இணைந்த கணித பாடத்தில் புதிய பாடத் திட்டத்தினை உள்ளடக்கிய சுயகற்றல் வழிகாட்டி ஒன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுவது பாராட்டத்தக்கது. ஆசிரியர்களின் எழுத்தாக்கப் பங்களிப்புடன், கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளரின் தொகுப் பாக்கத்தில் இந்நூல் வெளிவருகின்றது. அமரர் பொ.அன்னலிங்கம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் நிதியுதவியுடன் Race For Education அமைப்பினூடாக இந்நூல் வெளியிடப்பட்டு, 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவிருக்கிறது.

மாணவர்களின் சுயகற்றலுக்கு வாய்ப்பளித்து, பெறுபேற்று அடைவினை உயர்த்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள இந்நடவடிக்கையினைப் பாராட்டுகிறேன். மாணவர்கள் இதனைச் சரிவரப் பயன்படுத்தி, உயர்பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகிறேன். பாட ஆசிரியர்கள், மாணவர் களை வழிப்படுத்தி, உயர்சித்தி வீதத்தினைப் பெற அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

சு. சுந்தரசிவம்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம், வலயக் கல்வி அலுவலகம்,
மருதனார்மடம்.

www.ikeau.lk

பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவினால் வெளியிடப்படும் க.பொ.த (உ/தர) மாணவர்களுக்கான "இணைந்த கணிதபாட சுய கற்றல் கையேடு" எனும் பயிற்சி நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

கணித பாடம் கற்றலானது தர்க்கவியல், பகுப்பாய்வு, தொகுப்பாய்வு, ஆக்கபூர்வமான எண்ணம் போன்ற உயர் மட்ட சிந்தனை ஆற்றலை விருத்தியடையச் செய்வதாகும். இவ்வாறான ஆற்றலானது எதிர்காலத்தில் வாழ்க்கையின் நெருக்கீடுகளை மிகச்சிறப்பாக எதிர்கொள்ளும் திறனை மாணவர்களுக்கு வழங்குகின்றது. இடை நிலையில் கணித பாடம் என்றவாறு கற்பிக் கப்பட்டு க.பொ.த உயர் தரத்தில் கணிதத் துறையில் தூய கணிதம், பிரயோக கணிதம் என்ற இரு பாடங்களையும் இணைத்து இணைந்த கணிதம் என்ற பாடமாக் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

இப்பாடம் சார்ந்த தேர்ச்சியானது மாணவர்களை பொறியியல் மற்றும் தொழிநுட்ப துறை சார்ந்த உயர் கல்விக்கும் அதன் மூலமாக பெருமளவு பணம் ஈட்டக் கூடிய தொழில் துறைக்கும் இட்டுச்செல்கின்றது. இவ்வாறான ஒரு பின்புலத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு க.பொ.த (உ/தர) பரீட்சைப் பெறுபேற்றின் படி வலிகாமம் கல்வி வலய மாணவர்களது இணைந்த கணிதபாட சித்தி வீதமே(87%) வடக்கு மாகாணத்தின் மிகச் சிறந்த பெறுபேறாகும்.

மேற்கூறப்பட்ட சாதனையை தொடர்ந்தும் நிலைநாட்டுவதற்கும், எமது மாணவர்களின் இணைந்த கணித பாடத் தேர்ச்சியை மேலும் வலுப்படுத்தவும், கணிதத் துறைக்குள் அதிகளவான மாணவர்களை ஈர்ப்பதற்குமாக எமது வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.கு.விக்கினரூபன் அவர்களின் அயராத முயற்சியின் பயனாக வலயத்தின் இணைந்த கணித பாட ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள இக் கையேடு Race for Education நிறுவனத்தின் நிதி ஏற்பாட்டில் வெளியிடப்படவுள்ளது.

இணைந்த கணித பாட கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு காத்திரமான உறுத்துணையினை வழங்கவல்ல இக் கையேட்டு நூலின் தயாரிப்பில் மற்றும் வெளியீட்டில் பங்களித்த அனைவரையும் மனப்பூர்வமாக பாராட்டுவதுடன் வாழத்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ந.காண்டீபன்

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

(கல்வி அபிவிருத்தி)
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்

www.ikeon.lk

உதவிக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது ஔவையாரின் அழியாத வாக்கு ஆகும். இவ்வாக்கானது கணிதத்தினதும் தாய்மொழியினதும் முக்கியத்துவத்தினைக் கூறிநிற்கின்றது. தீர்க்க முடியாத பல பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டக்கூடிய ஒரு மார்க்கமாகவே கணிதம் ஆரம்ப காலத்தில் ஆரம்பமானது என இந்தியக் கணிதவியலாளரான சி.வி. பிமசங்கரன் அவர் கள் "கணிதக்கல்வி" (Mathamatics Education) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எமது நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் இயற்கை உலகைப் புரிந்து கொள்வதற்கும், பௌதிக உலகத்தில் அநேகமான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கும் மற்றும் கணிதத்தினை அடிப்படையாகக் கொண்ட வேறு பாடங்களைக் கற்பதற்கும் நாம் கணித பாடத்தைக் கற்றிருப்பது அவசியமாகின்றது.

இவற்றினைக் கருத்திற் கொண்டே பாடசாலைக் கலைத்திட்டத்தில் கணிதபாடம் தரம் ஒன்று முதல் தரம் 11 வரை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் உயர்தரத்தில் இணைந்த கணிதம், உயர் கணிதம், கணிதம் எனும் பெயர்களில் கற்பிக்கப்படுகின்றது. இவற்றில் இணைந்த கணிதம் அதிகளவு மாணவர்களின் தெரிவுப்பாடமாகவுள்ளது. இப்பாடத்தில் மாணவர்களின் அடைவினை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்டு மாணவர்களுக்காகச் சுயகற்றல் வழிகாட்டியாக இந்நூல் எமது வலய ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்காக இப்பணியினைச் செய்து தந்த ஆசிரியர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்நூலை தயாரித்து மாணவர்களுக்கு அச்சிட்டு வழங்கப் பெருமளவு நிதி தேவைப் பட்டது. இதற்கான நிதியினைத் தமிழ் மாணவர்களின் கணிதபாட உயர்ச்சிக்காக அதிகளவு பங்களிப்பினை வழங்கும் Race for Education இடம் நாம் கோரியபோது அவர்கள் உடனடியாக அமரர் பொ.அன்னலிங்கம் குடும்பத்தினரின் போற்றுதலுக்குரிய பங்களிப் பினை பெற்றுத்தந்தனர். இந் நிதியினை ஏற்பாடு செய்து தந்த Race for Education அமைப்பினருக்கும் பெருமளவு நிதியினை அன்பளிப்பாக வழங்கிய அமரர் பொ.அன்னலிங்கம் குடும்பத்தினருக் கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பாடசாலைகளும் மாணவர்களும் இந்த நூலினைப் பொருத்தமான முறையில் பயன்படுத்தி உயர்ச்சி காண்பதே இந்நூலின் உருவாக்கத்திற்குத் தம்மை அர்பணித்த அனைவருக்கும் நாம் செய்யும் பிரதியுபகாரமாகும்.

கு.விக்கினேஸ்வரன்.
உதவிக்கல்விப் பணிப்பாளர் (கணிதம்)
வலிகாமம் கல்வி வலயம்,
மருதனார்மடம்.

www.lkedu.lk

Message from Race for Education (RFE) Program

RFE Program was initiated with an objective to enhance the performance of the Tamil speaking students in the subject of Mathematics in GCE Ordinary Level examinations. RFE Program was inaugurated by a Group of 1992 Advanced Level batch students of Jaffna Hindu College with the support of Old Boys Associations of Jaffna Hindu College and other well-wishers and donors.

Since 2015, RFE Program has supported over 45,000 students from 400 schools in the Central, Eastern and Northern Provinces. RFE Program focuses exclusively on improving the performance in Mathematics at the GCE Ordinary Level examinations and through their effort we have witnessed a great deal of success.

We greatly appreciate the technical and financial support offered by the family of Late Mr. Ponnampalam Annalingam for the success of RFE from its inception in 2015. RFE Program congratulates the efforts of the family of Late Mr. P Annalingam, for publishing this guidebook in Combine Mathematics, in memory of their Late father Mr. P Annalingam, with a view of improving the performance of the students who sit Combined Mathematics in GCE Advanced Level. RFE believes that this noble initiative would encourage others to undertake similar projects in remembering their loved ones.

By the Old boys of AL 1992 of Jaffna Hindu College

www.kedu.lk

Dedication to late

Mr. Ponnampalam Annalingam



This book is sponsored by the family of
Mrs. Sivapakiam Annalingam (UK) and her children:-

- Mrs. K Shanthakumar
- Mrs. K Ravindran
- Mrs. S Mahendraraj
- Mr. A Kumararajan
- Mr. A Ravishankar

In memory of their late husband and father

Mr. P Annalingam.

The family hope this book will make a difference to the pupils of Srilanka. With the extensive explanations included in this book, the family expect the pupils will achieve their full potential and will prosper in their life in the future.

www.kalvu.lk

கணிதத் தொகுத்தறிவு முறை

n ஒரு நேர்முழு எண்ணாக இருந்து தரப்பட்ட முடிவை உண்மை என நிறுவுவதற்கு பின்வரும் படிமுறைகளைச் செய்ய வேண்டும்.

படி I :- $n=1$ ஆகும் போது உண்மையெனக் காட்ட வேண்டும்.

படி II :- $n = p$ ஆகும் போது உண்மை என எடுத்து $n = (p + 1)$க்கு உண்மை எனக் காட்ட வேண்டும்.

படி III :- கணிதத்தொகுத்தறிவு முறையால் இம்முடிவு எல்லா நேர்முழு எண் பெறுமானங்களுக்கும் உண்மையாகும்.

தொடர்கள்

கூட்டல் தொடர்

$a,\ a+d,\ a+2d,\ \ldots\ldots+a+((n-1)d$

nம் உறுப்பு $T_n = a+(n-1)d$

n உறுப்புக்களின் கூட்டுத்தொகை S_n

$$S_n = \frac{n}{2}\{2a+(n-1)d\}$$

பெருக்கற் தொடர்

$a,\ ar,\ ar^2,\ \ldots\ldots\ ar^{n-1}$

$T_n = ar^{n-1}$

$S_n = a+ar+ar^2+\ldots\ldots+ar^{n-1}$

$$rS_n = ar+ar^2+ar^{n-1}+ar^n$$

$$(1-r)\,S_n = a-ar^n$$

$$S_n = \frac{a(1-r^n)}{(1-r)} \qquad r \neq 1$$

$$S_n = an \qquad r = 1$$

கூட்டல் பெருக்கற் தொடர்

$a,\ 2ar,\ 3ar^2,\ \ldots\ldots nar^{n-1}$

$T_n = nar^{n-1}$

$S_n = a+2ar+3ar^2+\ldots\ldots+nar^{n-1}$

$$rS_n = ar+2ar^2+\ldots\ldots+(n-1)ar^{n-1}+nar^n$$

$$(1-r)\,S_n = a+ar+ar^2+ar^{n-1}+nar^n$$

$$(1-r)\,S_n = \frac{a(1-r^n)}{(1-r)} - nar^n$$

$$S_n = \frac{a(1-r^n)}{(1-r)^2} - \frac{nar^n}{(1-r)}$$

www.lkedu.lk

தொடர் ஒருங்குவதற்கான நிபந்தனை

$S_n = \sum_{r=1}^{n} Ur$

$\lim_{n \to \infty} S_n$

ஓர் முடிவுள்ள பெறுமானத்தை கொண்டிருப்பின் தொடர் ஒருங்கு தொடர் எனப்படும்.
அம் முடிவுள்ள பெறுமானம் அத்தொடரின் முடிவுற்ற உறுப்புக்களின் கூட்டுத்தொகை ஆகும்.

$\sum_{r=1}^{n} Ur$

$\lim_{n \to \infty} S_n$

பெருக்கற் தொடர்

$$S_n = \frac{a(1 - r^n)}{(1 - r)}$$

$$\sum_{r=1}^{a} ur = \frac{a}{(1 - r)}, \ |r| < 1$$

கூட்டல் பெருக்கற் தொடர்

$$S_n = \frac{a(1 - r^n)}{(1 - r)^2} - \frac{nar^n)}{(1 - r)}$$

$$\sum_{r=1}^{a} ur = \frac{a}{(1 - r)^2}, \ |r| < 1$$

பொதுத் தொடர்கள்

ஒரு தொடரின் rம் உறுப்பு U_r , V_r , W_r என்றவாறு குறிக்கப்படலாம்.

$U_r = f(r) - f(r+1)$ எனின்

$U_1 = f(1) - f(2)$
$U_2 = f(2) - f(3)$
.....
.....
$U_{n-1} = f(n-1) - f(n)$
$U_n = f(n) - f(n+1)$

$$\sum_{r=}^{n} U_r = f(1) - f(n+1)$$

$U_r = f(r+1) - f(r)$எனின்

$U_1 = f(2) - f(1)$
$U_2 = f(3) - f(2)$
.....
.....
$U_{n-1} = f(n) - f(n-1)$
$U_n = f(n+1) - f(n)$

$$\sum_{r=1}^{n} U_r = f(n+1) - f(1)$$

www.lkedu.lk

$U_r = f(r) - f(r+2)$ எனின்

$U_1 = f(1) - f(3)$
$U_2 = f(2) - f(4)$
$U_3 = f(3) - f(5)$
.....
.....
$U_{n-2} = f(n-2) - f(n)$
$U_{n-1} = f(n-1) - f(n+1)$
$U_n = f(n) - f(n+2)$

$\sum_{r=}^{n} U_r = f(1) + f(2) - f(n+1) - f(n+2)$

நுட்பங்கள்

01. $U_r = r(r+1)$

$= \frac{r(r+1)}{3}\{(r+2) - (r-1)\}$

$= \frac{r(r+1)(r+2)}{3} - \frac{(r-1)r(r+1)}{3}$

$= f(r+1) - f(r)$

இங்கு $f(r) = \frac{(r-1)r(r+1)}{3}$

02. $U_r = (2r-1)(2r+1)$

$= \frac{(2r-1)(2r+1)}{6}\{(2r+3) - (2r-3)\}$

$= \frac{(2r-1)(2r+1)(2r+3)}{6} - \frac{(2r-3)(2r-1)(2r+1)}{6}$

03. $U_r = \frac{1}{r(r+1)}$

$= \frac{1}{r} - \frac{1}{r+1}$

$= f(r) - f(r+1)$

இங்கு $f(r) = \frac{1}{r}$

04. $U_r = \frac{1}{r(r+1)(r+2)}$

$= \frac{1}{2(r+1)}\left[\frac{1}{r} - \frac{1}{r+2}\right]$

$= \frac{1}{2r(r+1)} - \frac{1}{2(r+1)(r+2)}$

www.lkedu.lk

05. $U_r = \frac{1}{r(r+1)(r+2)(r+3)}$

$= \frac{1}{3(r+1)(r+2)}\left\{\frac{1}{r} - \frac{1}{r+3}\right\}$

$= \frac{1}{3r(r+1)(r+2)} - \frac{1}{3(r+1)(r+2)(r+3)}$

06. $U_r = \frac{1}{(2r-1)(2r+1)(2r+3)}$

$= \frac{1}{4(2r+1)}\left\{\frac{1}{2r-1} - \frac{1}{2r+3}\right\}$

$= \frac{1}{4(2r-1)(2r+1)} - \frac{1}{4(2r+1)(2r+3)}$

01. $1 + 2 + 3 + \ldots\ldots\ldots\ldots + n = \frac{n(n+1)}{2}$

$n = 1$ போது LHS $= 1$

$RHS = \frac{1 \times 2}{2} = 1$

LHS = RHS

$n = 1$ இற்கு முடிவு உண்மை

$n = p$ இற்கு முடிவு உண்மை என்க.

$1 + 2 + 3 + \ldots\ldots\ldots\ldots + p = \frac{p(p+1)}{2}$

$n = p + 1$ போது

LHS $= 1 + 2 + 3 + \ldots\ldots\ldots\ldots + p + (p+1)$

$= \frac{p(p+1)}{2} + (p+1)$

$= (p+1)\left(\frac{p}{2} + 1\right)$

$= \frac{(p+1)(p+2)}{2} = \frac{(p+1)[(p+1)+1]}{2}$

$n = p$ ஆக முடிவு உண்மை எனில் $=$ RHS

$\therefore n = p + 1$ இற்கு முடிவு உண்மையாகும்.

$\therefore n$ இனது எல்லா நேர்முழு எண் பெறுமானத்திற்கும் கணித தொகுத்தறிவு முறையால் இம் முடிவு உண்மை ஆகும்.

www.lkedu.lk

02. $1^2 + 2^2 + 3^2 + \ldots\ldots\ldots\ldots + n^2 = \frac{n(n+1)(2n+1)}{6}$

$n = 1$ போது LHS $= 1^2 = 1$

$$\text{RHS} = \frac{1 \times 2 \times 3}{6} = 1$$

LHS = RHS

$\therefore n = 1$ இற்கு முடிவு உண்மையாகும்.

$n = p$ இற்கு முடிவு உண்மை என்க.

$$1^2 + 2^2 + 3^2 + \ldots\ldots\ldots\ldots + p^2 = \frac{p(p+1)(2p+1)}{6}$$

$n = p + 1$ ஆக

$$\text{LHS} = 1^2 + 2^2 + 3^2 + \ldots\ldots\ldots\ldots + p^2 + (p+1)^2$$

$$= \frac{p(p+1)(2p+1)}{6} + (p+1)^2$$

$$= (p+1)\left\{\frac{p}{6}(2p+1) + (p+1)\right\}$$

$$= \frac{(p+1)(2p^2 + 7p + 6)}{6}$$

$$= \frac{(p+1)(p+2)(2p+3)}{6}$$

$$= \text{RHS}$$

$\therefore$ LHS = RHS

$n = p$ ஆக முடிவு உண்மை எனில்

$\therefore n = p + 1$ இற்கு முடிவு உண்மையாகும்.

$\therefore$ எல்லா நேர்முழு எண் n இற்கு கணித தொகுத்தறிவு முறையால் இம் முடிவு உண்மை ஆகும்.

www.lkedu.lk

03. $\sum_{r=1}^{n} r^3 = \frac{n^2(n+1)^2}{4}$

$1^3 + 2^3 + 3^3 + \ldots\ldots\ldots\ldots + n^3 = \frac{n^2(n+1)^2}{4}$

$n = 1$ போது

$$LHS = 1^3 = 1$$

$$RHS = \frac{1^2 \times 2^2}{4} = \frac{1 \times 4}{4} = 1$$

$$\therefore \ LHS = RHS$$

$\therefore n = p$ இற்கு முடிவு உண்மை என்க.

$1^3 + 2^3 + 3^3 + \ldots\ldots\ldots\ldots + p^3 = \frac{p^2(p+1)^2}{4}$

$n = p + 1$ ஆக

$$LHS = 1^3 + 2^3 + 3^3 + \ldots\ldots\ldots\ldots + p^3 + (p+1)^3$$

$$= \frac{p^2(p+1)^2}{4} + (p+1)^3$$

$$= \frac{(p+1)^2 \ (p^2 + 4(p+1))}{4}$$

$$= \frac{(p+1)^2 \ (p^2 + 4p + 4)}{4}$$

$$= \frac{(p+1)^2 (p+2)^2}{4}$$

$$= RHS$$

$n = p$ ஆக முடிவு உண்மை எனில்

$\therefore n = p + 1$ இற்கு முடிவு உண்மையாகும்.

$\therefore$ எல்லா நேர்முழு எண் பெறுமானத்திற்கும் கணித தொகுத்தறிவு முறையால் இம் முடிவு உண்மை ஆகும்.

www.lkedu.lk

04. $\sum_{r=1}^{n} r \cdot r! = (n+1)! - 1$

$1.1! + 2.2! + 3.3! + \ldots\ldots\ldots\ldots + n.n! = (n+1)! - 1$

$n = 1$ போது

$LHS = 1.1! = 1 \times 1 = 1$

$RHS = (1+1)! - 1 = 2! - 1 = 2 - 1 = 1$

$LHS = RHS$

$\therefore n = 1$ இற்கு முடிவு உண்மை.

$n = p$ இற்கு முடிவு உண்மை என்க.

$1.1! + 2.2! + 3.3! + \ldots\ldots\ldots\ldots + p.p! = (p+1)! - 1$

$n = p+1$ ஆக

$LHS = 1.1! + 2.2! + 3.3! + \ldots\ldots\ldots\ldots + p.p! + (p+1)(P+1)!$

$= (p+1)! - 1 + (p+1) \cdot (p+1)!$

$= (p+1)! (1 + p + 1) - 1$

$= (p+1)! (p+2) - 1$

$= (p+2)! - 1$

$LHS = RHS$

$n = p$ ஆக முடிவு உண்மை எனில்

$\therefore n = p+1$ இற்கு முடிவு உண்மையாகும்.

$\therefore n$ இனது எல்லா நேர்முழு எண் பெறுமானத்திற்கும் இம் முடிவு உண்மை ஆகும்.

05. n னது எல்லா நேர்முழு எண் பெறுமானத்திற்கும் $8^n - 3^n$ என்பது 5 ஆல் மிச்சமின்றி வகுபடும் எனக் காட்டுக.

$f(n) = 8^n - 3^n$

$n = 1$ போது $f(1) = 8 - 3 = 5$

இது 5 ஆல் மிச்சமின்றி வகுபடும்.

$\therefore n = 1$ இற்கு முடிவு உண்மை.

$n = p$ ற்கு முடிவு உண்மை என்க.

$f(p) = 8^p - 3^p = 5k$ இரு $k \in Z$

$8^p = 5k + 3^p$

$n = p+1$ போது

$f(p+1) = 8^{p+1} - 3^{p+1}$

$= 8.8^p - 3^{p+1}$

$= 8(5k + 3^p) - 3^{p+1}$

$= 8 \times 5k + 8.3^p - 3^{p+1}$

$= 40k + 3^p (8 - 3)$

$= 40k + 5.3^p$

$= 5(8k + 3^p)$

$f(P+1) = 5m$ இது $8k + 3^p = m$

$m \in Z$

இது 5 ஆல் மிச்சமின்றி வகுபடும்.

$n = p$ ஆக முடிவு உண்மை எனில்

$\therefore n = p+1$ இற்கு முடிவு உண்மையாகும்.

$\therefore$ எல்லா நேர்முழு எண் பெறுமானத்திற்கும் கணித தொகுத்தறிவு முறையால் இம் முடிவு உண்மை ஆகும்.

www.lkedu.lk

06. எல்லா நேர்முழு எண் பெறுமானத்திற்கும் $2^{2n+1} - 6n - 2$ ஆனது 18 ஆல் மிச்சமின்றி வகுபடும் எனக் காட்டுக.

$f(n) = 2^{2n+1} - 6n - 2$ என்க.

$n = 1$ போது $f(1) = 2^3 - 6 - 2 = 8 - 6 - 2 = 0$

$n = 2$ போது $f(2) = 2^5 - 12 - 2 = 32 - 12 - 2 = 18$

இது 18 ஆல் மிச்சமின்றி வகுபடும்.

$\therefore n = 2$ இற்கு முடிவு உண்மை.

$n = p$ ற்கு முடிவு உண்மை என்க.

$$f(p) = 2^{2p+1} - 6p - 2 = 18k \text{ இது } k \in Z$$

$$2^{2p+1} = 18k + 6p + 2$$

$n = p + 1$ இற்கு

$$f(p+1) = 2^{2(p+1)+1} - 6(p+1) - 2$$

$$= 2^{2p+3} - 6p - 6 - 2$$

$$= 2^{2p+3} - 6p - 8$$

$$= 2^2 \cdot 2^{2p+1} - 6p - 8$$

$$= 4(18k + 6p + 2) - 6p - 8$$

$$= 72k + 24p + 8 - 6p - 8$$

$$= 72k + 18p$$

$$= 18(4k + p)$$

$= 18m$ இங்கு $4k + p = m$

$m \in Z$

இது 18 ஆல் மிச்சமின்றி வகுபடும்.

$n = p$ ஆக முடிவு உண்மை எனில்

$\therefore n = p + 1$ இற்கு முடிவு உண்மையாகும்.

$\therefore$ எல்லா நேர்முழு எண் பெறுமானத்திற்கும் கணித தொகுத்தறிவு முறையால் இம் முடிவு உண்மை ஆகும்.

www.lkedu.lk

07. $9+99+999+9999+\ldots\ldots$ என்ற தொடரின் n உறுப்புக்களின் கூட்டுத்தொகை. $\frac{1}{9}(10^{n+1}-10-9n)$ எனக் காட்டுக.

$9+99+999+9999+\ldots\ldots$

$=9\ [\ 1+11+111+1111+\ldots\ldots]$

$$=9\left[\frac{10-1}{9}+\frac{100-1}{9}+\frac{1000-1}{9}+\ldots\ldots\right]$$

$$=\not{9}\left[\frac{10^1-1}{\not{9}}+\frac{10^2-1}{\not{9}}+\frac{10^3-1}{\not{9}}+\ldots\ldots\right]$$

$$=\underbrace{10^1+10^2+10^3+\ldots\ldots}_{\text{பெ.வி}}-n$$

$$=10\left(\frac{1-10^n}{1-10}\right)-n$$

$$=10\left(\frac{1-10^n}{-9}\right)-n$$

$$=\frac{10^{n+1}-10}{9}-n$$

$$=\frac{1}{9}\left[\ 10^{n+1}-10-9n\ \right]$$

08. நேரான உறுப்புகளைக் கொண்ட பெருக்கல் தொடர் ஒன்றின் p, q, r ஆவது உறுப்புக்கள் முறையே P, Q, R ஆகும்.

$(q-r)\ log\,P+(r-p)\ log\,Q+(p-q)\ log\,R=0$ எனக் காட்டுக.

பொது விகிதம் d என்க. 1ம் உறுப்பு a என்க.

$T_p=P$

$P=ad^{p-1}\ \rightarrow\ (1)$

$T_q=Q$

$Q=ad^{q-1}\ \rightarrow\ (2)$

$T_r=R$

$R=ad^{r-1}\ \rightarrow\ (3)$

$$(1)/(2)\Rightarrow\frac{P}{Q}=\frac{ad^{p-1}}{ad^{q-1}}$$

$$\frac{P}{Q}=d^{p-q}$$

$$log\frac{P}{Q}=log\ d^{p-q}$$

$$log\,P-log\,Q=(p-q)\ log\,d\longrightarrow(1)$$

இவ்வாறே $log\,Q-log\,R=(q-r)\ log\,d\longrightarrow(2)$ எனக் காட்டலாம்.

$$(1)/(2)\Rightarrow\frac{log\,P-log\,Q}{log\,Q-log\,R}=\frac{p-q}{q-r}$$

$$(q-r)\ (log\,P-log\,Q)=((p-q)\ (log\,Q-log\,R)$$

$$(q-r)\ log\ P-(q-r)\ log\ Q$$

$$=(p-q)\ log\ Q-(p-q)\ log\,R$$

$$(q-r)\ log\,P+(r-p)\ log\,Q+(p-q)\ log\,R=0$$

www.lkedu.lk

தொடர்கள்

★ 1ம் உறுப்பு a ஆகவும், பொதுவித்தியாசம் d ஆகவும் உள்ள ஒரு கூட்டல்விருத்தியின் nம் உறுப்பு $T_n = a + (n-1)\,d$ எனவும், n உறுப்புகளின் கூட்டுத்தொகை $S_n = \frac{n}{2}\{2a + (n-1)d\}$ எனவும் தரப்படும்.

★ 1ம் உறுப்பு a ஆகவும் பொதுவிகிதம் r ஆகவும் உள்ள பெருக்கல்விருத்தியின் nம் உறுப்பு $T_n = ar^{n-1}$ எனவும், n உறுப்புகளின் கூட்டுத்தொகை $S_n = \frac{a(1-r^n)}{1-r}$ எனவும் தரப்படும்.

09. ஒரு தொடரின் பொது உறுப்பு

$U_r = \frac{r}{(r+1)(r+2)(r+3)}$ ஆகும்.

$U_r = \frac{A}{(r+1)} + \frac{B}{(r+2)} + \frac{C}{(r+3)}$ ஆகுமாறு

A, B, C என்னும் மாறிலிகளைக் காண்க.

இதிலிருந்து $\sum_{r=1}^{n} U_r = \frac{1}{4} + \frac{1}{2(n+2)} - \frac{3}{2(n+3)}$ எனக் காட்டுக. இத்தொடர் ஒருங்கும் எனக் காட்டி முடிவிலி உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

$$U_r = \frac{r}{(r+1)(r+2)(r+3)}$$

$$\frac{r}{(r+1)(r+2)(r+3)} = \frac{A}{(r+1)} + \frac{B}{(r+2)} + \frac{C}{(r+3)}$$

$$r = A(r+2)(r+3) + B(r+1)(r+3) + C(r+1)(r+2)$$

$r = -1$ இல் $-1 = 2A$

$$A = \frac{-1}{2}$$

$r = -2$ இல் $-2 = -B$

$$B = 2$$

$r = -3$ இல் $-3 = 2C$

$$C = \frac{-3}{2}$$

$$A = \frac{-1}{2}, \quad B = 2, \quad C = \frac{-3}{2}$$

$$U_r = \frac{-1}{2(r+1)} + \frac{2}{r+2} - \frac{3}{2(r+3)}$$

www.lkedu.lk

$r=1$ இல் $\quad U_1 = \frac{-1}{4} + \frac{2}{3} - \frac{3}{8}$

$r=2$ இல் $\quad U_2 = \frac{-1}{6} + \frac{2}{4} - \frac{3}{10}$

$r=3$ இல் $\quad U_3 = \frac{-1}{8} + \frac{2}{5} - \frac{3}{12}$

$\vdots$

$r=n-2$ இல் $\quad U_{n-2} = \frac{-1}{2(n-1)} + \frac{2}{n} - \frac{3}{2(n+1)}$

$r=n-1$ இல் $\quad U_{n-1} = \frac{-1}{2n} + \frac{2}{n+1} - \frac{3}{2(n+2)}$

$r=n$ இல் $\quad U_n = \frac{-1}{2(n-1)} + \frac{2}{n+2} - \frac{3}{2(n+3)}$

$$\sum_{r=1}^{n} U_r = \frac{-1}{4} + \frac{2}{3} - \frac{1}{6} - \frac{3}{2(n+2)} + \frac{2}{n+2} - \frac{3}{2(n+3)}$$

$$\sum_{r=1}^{n} U_r = \frac{1}{4} + \frac{1}{2(n+2)} - \frac{3}{2(n+3)}$$

$$\lim_{n \to \infty} \sum_{r=1}^{n} U_r = \lim_{n \to \infty} \left(\frac{1}{4} + \frac{1}{2(n+2)} - \frac{3}{2(n+3)} \right)$$

$$\sum_{r=1}^{\infty} U_r = \frac{1}{4} + 0 - 0 = \frac{1}{4} < \infty$$

∴ ஒருங்கு தொடர் முடிவிலி உறுப்புக்களின் கூட்டுத்தொகை $\frac{1}{4}$ ஆகும்.

www.lkedu.lk

10. ஒரு தொடரின் பொது உறுப்பு $U_r = \frac{2r+6}{r(r+1)(r+2)}$ ஆகும்.

$U_r = \frac{A}{r} + \frac{B}{r+1} + \frac{C}{r+2}$ ஆகுமாறு A, B, C என்னும் மாறிலிகளைக் காண்க.

$\sum_{r=1}^{n} U_r = \frac{5}{2} - \frac{3}{n+1} + \frac{1}{n+2}$ எனக் காட்டுக.

இத் தொடர் ஒருங்கும் எனக்காட்டி முடிவிலி உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

www.lkedu.lk

11. ஒரு தொடரின் பொது உறுப்பு $U_r = \frac{2r+1}{r(r+1)(r+2)}$ ஆகும்.

$f(r) = \frac{\lambda(4r+1)}{r(r+1)}$ எனின், $U_r = f(r) - f(r+1)$ ஆகுமாறு λ வைக் காண்க.

$\sum_{r=1}^{n} U_r$ ஐக் காண்க. இத்தொடர் ஒருங்கும் எனக் காட்டி முடிவிலி உறுப்புக்களின் கூட்டுத் தொகையைக் காண்க.

$$U_r = \frac{2r+1}{r(r+1)(r+2)}$$

$$f(r) = \frac{\lambda(4r+1)}{r(r+1)}$$

$$f(r+1) = \frac{\lambda(4(r+1)+1)}{(r+1)(r+2)} = \frac{\lambda(4r+5)}{(r+1)(r+2)}$$

$$U_r = f(r) - f(r+1)$$

$$\frac{2r+1}{r(r+1)(r+2)} = \frac{\lambda(4r+1)}{r(r+1)} - \frac{\lambda(4r+5)}{(r+1)(r+2)}$$

$$2r+1 = \lambda(4r+1)(r+2) - \lambda(4r+5)(r)$$

மாறிலி $1 = 2\lambda$

$$\lambda = \frac{1}{2}$$

$$f(r) = \frac{4r+1}{2(r)(r+1)}$$

$$U_r = f(r) - f(r+1)$$

$r=1$ இல் $U_1 = f1 - f2$

$r=2$ இல் $U_2 = f2 - f3$

$r=3$ இல் $U_3 = f3 - f4$

⋮

$r=n-2$ இல் $U_{n-2} = fn-2 - fn-1$

$r=n-1$ இல் $U_{n-1} = fn-1 - fn$

$r=n$ இல் $U_n = fn - fn+1$

$$\sum_{r=1}^{n} U_r = f(1) - f(n+1)$$

$$= \frac{5}{4} - \frac{4n+5}{(n+1)(n+2)}$$

$$\sum_{r=1}^{n} U_r = \frac{5}{4} - \frac{4n+5}{(n+1)(n+2)}$$

$$\lim_{n\to\infty} \sum_{r=1}^{n} U_r = \lim_{n\to\infty} \left(\frac{5}{4} - \frac{4n+5}{(n+1)(n+2)}\right) = \frac{5}{4}$$

$\lim_{n\to\infty} \sum_{r=1}^{n} U_r = \frac{5}{4}$ முடிவுள்ளது ஒருங்கு தொடர் முடிவிலி உறுப்புக்களின் கூட்டுத்தொகை $\frac{5}{4}$ ஆகும்.

www.lkedu.lk

12. ஒரு தொடரின் பொது உறுப்பு $U_r = r(3r+5)$ ஆகும்.

$f(r) = \mu(r-1)r\ (r+2)$ எனின், $U_r = f(r) - f(r+1)$ ஆகுமாறு μ ஐக் காண்க.

$\sum_{r=1}^{n} U_r$ ஐக் காண்க. இத்தொடர் ஒருங்குவதில்லை எனக் காட்டுக.

$U_r = r(3r+5)$

$f(r) = \mu(r-1)r\ (r+2)$

$f(r+1) = \mu r(r+1)(r+3)$

$U_r = f(r) - f(r+1)$

$r(3r+5) = \mu(r-1)r(r+2) - \mu r(r+1)(r+3)$

$3r+5 = \mu(r-1)(r+2) - \mu(r+1)(r+3)$

மாறிலி $5 = -2\mu - 3\mu$

$5\mu = -5$

$\mu = -1$

$\therefore f(r) = -(r+1)r\ (r+2)$

$U_r = f(r) - f(r+1)$

$r=1$ இல் $U_1 = f1 - f2$

$r=2$ இல் $U_2 = f2 - f3$

$r=3$ இல் $U_3 = f3 - f4$

$\vdots$

$r=n-2$ இல் $U_{n-2} = fn-2 - fn-1$

$r=n-1$ இல் $U_{n-1} = fn-1 - fn$

$r=n$ இல் $U_n = fn - fn+1$

$\sum_{r=1}^{n} U_r = f1 - f\,n+1$

$\sum_{r=1}^{n} U_r = 0 + n(n+1)(n+3)$

$\lim_{n \to \infty} \sum_{r=1}^{n} U_r = \lim_{n \to \infty} n(n+1)(n+3) = \infty$

$\therefore$ தொடர் ஒருங்காது

www.lkedu.lk

13. $f(r) = \frac{r^3}{3} + \frac{r^2}{2} + \frac{r}{6}$ எனின், $f(r) - f(r+1) = r^2$ எனக்காட்டுக.

இதிலிருந்து $\sum_{r=1}^{n} r^2$ ஐக் காண்க. எல்லா நேர்நிறை எண் n இற்கும் $\sum_{r=1}^{n} r(7r-1) = \sum_{r=n+1}^{2n} r(r+1)$ என நிறுவுக.

$$f(r) = \frac{r^3}{3} + \frac{r^2}{2} + \frac{r}{6}$$

$$\therefore f(r-1) = \frac{(r-1)^3}{3} + \frac{(r-1)^2}{2} + \frac{(r-1)}{6}$$

$$f(r) - f(r-1) = \frac{r^3}{3} - \frac{(r-1)^3}{3} + \frac{r^2}{2} - \frac{(r-1)^2}{2} + \frac{r}{6} - \frac{(r-1)}{6}$$

$$= \frac{r^3 - (r-1)^3}{3} + \frac{r^2(r-1)^2}{2} + \frac{r-(r-1)}{6}$$

$$= \frac{6r^2}{6}$$

$$f(r) - f(r-1) = r^2$$

r = 1 இல் $f1 - f0 = 1^2$

r = 2 இல் $f2 - f1 = 2^2$

r = 3 இல் $f3 - f2 = 3^2$

$\vdots$

r = n − 2 இல் $fn-2 - fn-3 = (n-2)^2$

r = n − 1 இல் $fn-1 - fn-2 = (n-1)^2$

r = n இல் $fn - fn+1 = n^2$

$$fn - f0 = \sum_{r=1}^{n} r^2$$

$$\sum_{r=1}^{n} r^2 = \frac{n^3}{3} + \frac{n^2}{2} + \frac{n}{6} - 0$$

$$\sum_{r=1}^{n} r^2 = \frac{n(n+1)(2n+1)}{6}$$

$$\text{LHs} = \sum_{r=1}^{n} r(7r-1)$$

$$= \sum_{r=1}^{n} (7r^2 - r)$$

$$= 7\sum_{r=1}^{n} r^2 - \sum_{r=1}^{n} r$$

www.ikedu.lk

$$= \frac{7n(n+1)(2n+1)}{6} - \frac{n(n+1)}{2}$$

$$= \frac{n(n+1)}{6}[14n + 7 - 3]$$

$$= \frac{n(n+1)(7n+2)}{3} \longrightarrow (*)$$

$$\text{RHS} = \sum_{r=n+1}^{2n} r(r+1) = \sum_{r=1}^{2n} r(r+1) - \sum_{r=1}^{n} r(r+1)$$

$$= \sum_{r=1}^{2n} r^2 + \sum_{r=1}^{2n} r - \sum_{r=1}^{n} r^2 - \sum_{r=1}^{n} r$$

$$= \frac{2n(2n+1)(4n+1)}{6} + \frac{2n(2n+1)}{2} - \frac{n(n+1)(2n+1)}{6} - \frac{n(n+1)}{2}$$

$$= \frac{n(n+1)(7n+2)}{3} \longrightarrow (**)$$

(*) & (**) LHs = RHs

14. $\frac{1}{1.3.5} + \frac{1}{2.4.6} + \frac{1}{3.5.7} + \ldots\ldots$ எனும் தொடரின் rம் உறுப்பு U_r ஐ எழுதுக.

$f(r) = \frac{-1}{4(r+2)(r+4)}$ எனின், $f(r) - f(r-2) = U_r$ எனக் காட்டுக. இதிலிருந்து

$\sum_{r=1}^{n} U_r$ ஐக் காண்க. $\sum_{r=1}^{\infty} U_r = \frac{11}{96}$ என உய்த்தறிக.

$$\frac{1}{1.3.5} + \frac{1}{2.4.6} + \frac{1}{3.5.7} + \ldots\ldots$$

$$U_r = \frac{1}{r(r+2)(r+4)}$$

$$f(r) = \frac{-1}{4(r+2)(r+4)}$$

$$\therefore f(r-2) = \frac{-1}{4r(r+2)}$$

$$f(r) - f(r-2) = \frac{-1}{4(r+2)(r+4)} + \frac{1}{4r(r+2)}$$

$$= \frac{-r + r + 4}{4r(r+2)(r+4)}$$

$$= \frac{1}{r(r+2)(r+4)} = U_r$$

$$\therefore U_r = f(r) - f(r-2)$$

www.lkedu.lk

r = 1 இல் $U_1 = f1 - f(-1)$

r = 2 இல் $U_2 = f2 - f_0$

r = 3 இல் $U_3 = f3 - f1$

r = 4 இல் $U_4 = f4 - f2$

$\vdots$

r = n – 3 இல் $U_{n-3} = fn-3 - fn-5$

r = n – 2 இல் $U_{n-2} = fn-2 - fn-4$

r = n – 1 இல் $U_{n-1} = fn-1 - fn-3$

r = n இல் $U_n = fn - fn-2$

$$\sum_{r=1}^{n} U_r = fn + fn-1 - f_0 - f(-1)$$

$$= \frac{-1}{4(n+2)(n+4)} - \frac{-1}{4(n+1)(n+3)} - \left(\frac{-1}{32}\right) - \left(\frac{-1}{12}\right)$$

$$\lim_{n \to \infty} \sum_{r=1}^{n} U_r = \frac{1}{32} + \frac{1}{12} = \frac{11}{96} < \infty \text{ ஒருங்கும்.}$$

$$\sum_{r=1}^{\infty} U_r = \frac{11}{96}$$

15. $U_r = \frac{r+4}{r(r+1)(r+2)}$ எனின், $U_r = 2V_r - V_{r+1}$ ஆகுமாறு k ஐக் காண்க. இங்கு $V_r = \frac{k}{r(r+1)}$ இதிலிருந்து $\sum_{r=1}^{n} \frac{U_r}{2^{r+1}}$ ஐக் காண்க.

$$U_r = \frac{r+4}{r(r+1)(r+2)}$$

$$V_r = \frac{k}{r(r+1)}$$

$$\therefore V_{r+1} = \frac{k}{(r+1)(r+2)}$$

$$U_r = 2V_r - V_{r+1}$$

$$\frac{r+4}{r(r+1)(r+2)} = \frac{2k}{r(r+1)} - \frac{k}{(r+1)(r+2)}$$

$$= \frac{2k(r+2) - kr}{r(r+1)(r+2)}$$

$$r + 4 = kr + 4k$$

$$k = 1$$

$$\therefore V_r = \frac{1}{r(r+1)}$$

www.ikedu.lk

$$\frac{U_r}{2^{r+1}} = \frac{1}{2^{r+1}}\left(2V_r - V_{r+1}\right)$$

$$\frac{U_r}{2^{r+1}} = \frac{1}{2^r}V_r - \frac{1}{2^{r+1}}V_{r+1}$$

$r = 1$ இல் $\quad \frac{U_1}{2^2} = \frac{1}{2}V_1 - \frac{1}{2^2}V_2$

$r = 2$ இல் $\quad \frac{U_2}{2^3} = \frac{1}{2^2}V_2 - \frac{1}{2^3}V_3$

$r = 3$ இல் $\quad \frac{U_3}{2^4} = \frac{1}{2^3}V_3 - \frac{1}{2^4}V_4$

$\vdots$

$r = n-1$ இல் $\quad \frac{U_{n-1}}{2^n} = \frac{1}{2^{n-1}}V_{n-1} - \frac{1}{2^n}V_n$

$r = n$ $\quad \frac{U_n}{2^{n+1}} = \frac{1}{2^n}V_n - \frac{1}{2^{n+1}}V_{n+1}$

$$\sum_{r=1}^{n}\frac{U_r}{2^{r+1}} = \frac{1}{2}V_1 - \frac{1}{2^{n+1}}V_{n+1}$$

$$= \frac{1}{4} - \frac{1}{2^{n+1}}\,\frac{1}{(n+1)(n+2)}$$

www.ikedu.lk

சமனிலி

அட்சரகணித சமனிலிகள்

01. a,b,cÎ 1Â ஆக இருக்க.

a^2+b^2 ³ $2ab$ எனக் காட்டி

$a^2+b^2+c^2$ ³ $ab+bc+ca$ எனக் காட்டுக.

விடை

a,bÎ -1Â ஆக $(a-b)^2$ ³ 0 ஆகும்.

$a^2-2ab+b^2$ ³ 0

a^2+b^2 ³ $2ab$

a^2+b^2 ³ $2ab$

b^2+c^2 ³ $2bc$

c^2+a^2 ³ $2ac$

$2a^2+2b^2+2c^2$ ³ $2ab+2bc+2ca.$

$a^2+b^2+c^2$ ³ $ab+bc+ca$ ஆகும்.

02. $a,b,c>0$ ஆக இருக்க $a+b$ ³ $2\sqrt{ab}$ எனவும்

$(a+b)(b+c)(c+a)$ ³ $8abc$ எனவும் காட்டுக.

விடை a,b,cÎ 1Â^+_o

\ $\left(\sqrt{a}-\sqrt{b}\right)^2$ ³ 0

$\left(\sqrt{a}\right)^2-2\sqrt{a}\sqrt{b}+\left(\sqrt{b}\right)^2$ ³ 0

$a-2\sqrt{ab}+b$ ³ 0

$a+b$ ³ $2\sqrt{ab}$ ஆகும்.

$(a+b)$ ³ $2\sqrt{ab}$

$(b+c)$ ³ $2\sqrt{bc}$

$(c+a)$ ³ $2\sqrt{ca}$

$(a+b)(b+c)(c+a)$ ³ $8\sqrt{ab\cdot bc\cdot ca}$

$= 8\sqrt{a^2b^2c^2}$

$= 8abc$

$(a+b)(b+c)(c+a)$ ³ $8abc$ //

www.lkedu.lk

03. x, y, z என்பன நேர் மெய்யெண்களாக இருக்க

i) $\frac{x}{y}+\frac{y}{x} \geq 2$ எனக் காட்டிட இதனை பயன்படுத்தி

ii) $(x+y+z)\left(\frac{1}{x}+\frac{1}{y}+\frac{1}{z}\right) \geq 9$ எனக் காட்டுக.

விடை $x, y \in R^+$

$\left(\sqrt{\frac{x}{y}}-\sqrt{\frac{y}{x}}\right)^2 \geq 0$ ஆகும்.

$\frac{x}{y}-2\sqrt{\frac{x}{y}.\frac{y}{x}}+\frac{y}{x} \geq 0$

$\frac{x}{y}+\frac{y}{x} \geq 2$

$(x+y+z)\left(\frac{1}{x}+\frac{1}{y}+\frac{1}{z}\right)=\frac{x+y+z}{x}+\frac{x+y+z}{y}+\frac{x+y+z}{z}$

$=1+\frac{y}{x}+\frac{z}{x}+\frac{x}{y}+1+\frac{z}{y}+\frac{x}{z}+\frac{y}{z}+1$

$=3+\left(\frac{x}{y}+\frac{y}{x}\right)+\left(\frac{z}{y}+\frac{y}{z}\right)+\left(\frac{x}{z}+\frac{z}{x}\right)$

$\geq 3+2+2+2$

≥ 9

04. $x^5+y^5 \geq x^4y+xy^4$ எனக்காட்டுக. இங்கு $x, y > 0$ ஆகும்.

$x^5+y^5-\left(x^4y+xy^4\right) = x^4(x-y)+y^4(y-x)$

$=(x-y)\left[x^4-y^4\right]$

$=(x-y)\left(x^2-y^2\right)\left(x^2+y^2\right)$

$=(x-y)(x-y)(x+y)\left(x^2+y^2\right)$

$=(x-y)^2(x+y)\left(x^2+y^2\right)$

$\geq (x-y)^2 \geq 0 \quad x+y>0, x^2+y^2>0$

$\therefore x^5+y^5-\left(x^4y+xy^4\right) \geq 0$

$x^5+y^5 \geq x^4y+xy^4$ ஆகும்.

▫

05. $x^7+1 \geq x^6+x$ எனக் காட்டுக. இங்கு $x > 0$ ஆகும்.

விடை

$x^7+1-\left(x^6+x\right)=x^7-x^6+1-x$

$=x^6[x-1]-1[x-1]$

$=[x-1]\left[x^6-1\right]$

$=(x-1)\left[x^3-1\right]\left[x^3+1\right]$

$=(x-1)(x-1)\left(x^2+x+1\right)\left(x^3+1\right)$

$=(x-1)^2\left(x^2+x+1\right)\left(x^3+1\right)$

≥ 0

$x^7+1-\left(x^6+x\right) \geq 0$

$x^7+1 \geq x^6+x$ //

www.tkedu.lk

பின்வரும் சமனிலிகளைத் தீர்க்க.

01. $(x-1)(x+2) \geq 0$

	$x < -2$	$-2 \leq x < 1$	$x \geq 1$
$(x-1)(x+2)$	$(-)\times(-)$	$(-)(+)$	$(+)(+)$
இன் குறி	$(+)$	$(-)$	$(+)$

$\therefore x \leq -2$ or $x \geq 1$ ஆகும்.

02. $(x+1)(x-2)(x-3) < 0$

$x < -1$	$-1 < x < 2$	$2 < x < 3$	$x > 3$	
$(-)(-)(-)$	$(+)(-)(-)$	$(+)(+)(-)$	$+\times+\times+$	$(x+1)(x-2)(x-3)$
$(-)$	$(+)$	$(-)$	$(+)$	இன் குறி

$x < -1$ அல்லது $2 < x < 3$

03. $x \neq 1$ இற்கு $\left(\frac{x-3}{x-1}\right) \geq 0$

	$x < 1$	$1 < x < 3$	$x \geq 3$
$\frac{x-3}{x-1}$ இன்	$\frac{(-)}{(-)}$	$\frac{(-)}{(+)}$	$\frac{(+)}{(+)}$
குறி	$(+)$	$(-)$	$+$

$x < 1$ அல்லது $x \geq 3$ ஆகும்.

04. $x^2 - 5|x| - 6 < 0$

$x \geq o$ எனின் $x^2 - 5x - 6 < O$

$(x-6)(x+1) < O$

+ + + | - - - - | + + +

-1 6

$\therefore -1 < x < 6$

தீர்வு $o \leq x < 6$ ——— ①

$x < o$ எனின்

$x^2 - 5(-x) - 6 < 0$

$x^2 + 5x - 6 < 0$

$(x+6)(x-1) < 0$

+ + + + | - - - - - | + + +

$x = -6$ $x = 1$

$-6 < x < 1$

தீர்வு $-6 < x < o$ ——— ②

தீர்வு $-6 < x < 6$

05. $|x-1|+|x-2| \geq 3$

$x<1$ எனின் $-(x-1)+[-(x-2)] \geq 3$

$-x+1-x+2 \geq 3$

$-2x \geq 0$

$x \leq 0$

தீர்வு $x \leq 0$ ——— ①

$1 \leq x<2$ $\quad x-1-(x-2) \geq 3$

$x-1-x+2 \geq 3$

$1 \geq 3$

தவறு

தீர்வு இல்லை ——— ②

$x \geq 2$ எனின் $\quad x-1-(x-2) \geq 3$

$2x \geq 6$

$x \geq 3$


தீர்வு $x \geq 3$ ——— ③

இறுதி தீர்வு $x \leq 0$ *or* $x \geq 3$ ஆகும்.

06. $\frac{|x-2|}{x+1} \leq 0$, $x \neq -1$ ஆகும்.

$x<2$ எனின் $\frac{-(x-2)}{x+1} \leq 0$

$\frac{x-2}{x+1} \geq 0$



$x<-1$ $\quad x \geq 2$

தீர்வு

$x<-1$ $\quad (\because x<2)$

$x \geq +2$ எனின்

$\frac{x-2}{x+1} \leq 0$



$-1<x \leq 2$

தீர்வு $x=2$ $\quad (\because x \geq 2)$

இறுதி தீர்வு $x<-1$ *or* $x=2$


www.lkedu.lk

மட்டுச்சமனிலி வரைபுகள்.


01. $y = |x - 1|$

$$= \begin{cases} x - 1 & , \ x \geq 1 \\ -x + 1 & , \ x < 1 \end{cases}$$

$y = x-1$




$y = |x - 1|$




02. $y = |1 - 2x|$

$$= \begin{cases} 2x - 1 & , \ x \geq \frac{1}{2} \\ -2x + 1 & , \ x < \frac{1}{2} \end{cases}$$

$y = 1 - 2x$




$y = |1 - 2x|$



www.lkedu.lk


03. $y = /+|x-1|$

$$= \begin{cases} 1+(x-1) & , \ x \geq 1 \\ = x & \\ 1+(1-x) & , \ x < 1 \\ = 2-x & \end{cases}$$




04. $y = 3-|x-1|$

$$= \begin{cases} 3-(x-1) & , \ x \geq 1 \\ = -x+4 & \\ 3-(1-x) & , \ x < 1 \\ = x+2 & \end{cases}$$




www.lkedu.lk

05. $y=/3-/x-11/$




06. $y = 1x^2 - 11$

$y = x^2 - 1$



$y = |x^2 - 1|$



www.lkedu.lk

07. $y = |x^2 - 4x + 3|$


$y = x^2 - 4x + 3$


$= x^2 - 4x + 4 - 1$

$= (x - 2)^2 - 1$

$y = 0 \Rightarrow \quad x = 1, 3 \quad (1,0)\ (3,0)$

$x = 0 \Rightarrow \quad y = 3 \quad (0,3)$






உதாரணம் 01 :-

வரைபு முறையைப் பயன்படுத்தி $1x+1/7\ \ 3x+7$ ஐத்திருப்தியாக்கும் x இன் பெறுமான வீச்சைக் காண்க.

$$|x+1| = \begin{cases} x+1 & , x \geq -1 \\ -x-1 & , x < -1 \end{cases}$$



புள்ளி A இன் x ஆள்கூறு காண

$-x - 1 = 3x + 7$

$4x = -8$

$x = -2$

∴ வீச்சு , $x < -2$


www.lkedu.lk

உதாரணம் 02 :-

ஒரே ஆள்கூற்று அச்சுக்களில் $y=|x-1|$, $y=3|x-5|$ என்பவற்றின் வரைபுகளை வரைந்து $|x-1|>3|x-5|$ ஆகுமாறுள்ள x இன் பெறுமானங்களின் தொடையைக் காண்க.

$$y=|x-1|=\begin{cases} x-1 & ; x \geq 1 \\ 1-x & ; x<1 \end{cases}$$

$$y=3|x-5|=\begin{cases} 3(x-5) & ; x \geq 5 \\ =3x-15 & \\ 3(5-x) & ; x<5 \\ =15-3x & \end{cases}$$



புள்ளி A இன் x ஆள்கூறு காண

$x-1=-3x+15$

$4x=16$

$x=4$

புள்ளி B இன் x ஆள்கூறு காண

$x-1=3x-15$

$2x=14$

$x=7$

$\therefore$ x இன் வீச்சு $4<x<7$


உதாரணம் 03:-

a. $1-|x|<x^2-1$ ஆகுமாறு x இன் பெறுமான வீச்சைக் காண்க.

b. $1-|x|<|x^2-1|$ ஆகுமாறு x இன் பெறுமான வீச்சைக் காண்க.


a. $$y=1-|x|=\begin{cases} 1-x & ; x \geq 0 \\ 1+x & ; x<0 \end{cases}$$

www.lkedu.lk



∴ வீச்சு $-1 < x < 1$

b.




x இன் எல்லா மெய்ப்பெறுமானங்களுக்கும் இது உண்மையாகும்.

உதாரணம் 04:-

$y = |x - a|$, $y = b|x+1|$ ஆகியவற்றின் வரைபுகளைப் பயன்படுத்தி (a > b > o) சமனிலி $|x - a| 7 > b|x+1|$ ஐத் திருப்தியாக்கும் x இன் எல்லாப் பெறுமானங்களினதும் தொடை $\{x; -5 < x < \frac{1}{3}\}$ எனின் a,b இன் பெறுமானங்களைக் காண்க.

$$y = |x - a| = \begin{cases} x - a & ; x \geq a \\ -x + a & ; x < a \end{cases}$$

$$y = b|x+1| = \begin{cases} b(x+1) & x \geq -1 \\ b(-x-1) & x < -1 \end{cases}$$



$y = -x+a, y = b(-x-1)$ என்பவற்றைத் தீர்க்க.

$$-x+a = b(-x-1)$$
$$x(b-1) = -b-a$$
$$x = \frac{a+b}{1-b} = -5$$
$$a+b = -5+5b$$
$$4b-a = 5 \quad \text{——①}$$

$y=-x+a$, $y=b(x+1)$ என்பவற்றைத் தீர்க்க.

$$-x+a = b(x+1)$$
$$a-b = (b+1)x$$
$$x = \frac{a-b}{b+1} = \frac{1}{3}$$
$$3a-3b = b+1$$
$$4b-3b = -1 \quad \text{——②}$$

①, ② ⇒ $a = 3, \quad b = 2$

www.lkedu.lk

உதாரணம் 05:-

$y = |x - 1| + |x - 2|$ இன் வரைபை வரைக. இதிலிருந்து $|x - 1| + |x - 2| \leq 5$ ஆக இருக்கும் x இன் பெறுமான வீச்சைக் காண்க.

$y = |x - 1| + |x - 2|$ ——— (*)

$x < 1$ எனின்

(*) $\Rightarrow$ $y = 1 - x + 2 - x$

$= -2x + 3$

$1 \leq x < 2$ எனின்


(*) $\Rightarrow$ $y = (x - 1) + (2 - x)$

$y = 1$

$x \geq 2$ எனின்

(*) $\Rightarrow$ $y = (x - 2) + (x - 1)$

$= 2x - 3$




\ வீச்சு $-1 \leq x \leq 4$

உதாரணம் 06:-

$y = 2|x + 1| - 3$, $y = x + 2|x - 1|$ ஆகியவற்றின் வரைபுகளை ஒரே வரிப்படத்தில் பரும்படியாக வரைக. இதிலிருந்து $x + 2|x - 1| > 2|x + 1| - 3$ ஐத் திருப்தியாக்கும் x இன் பெறுமானத் தொடையைக் காண்க.

$$y = 2|x + 1| - 3 = \begin{cases} 2(x + 1) - 3 & ; \ x \geq -1 \\ = 2x - 1 & \\ 2(-x - 1) - 3 & ; \ x < -1 \\ = -2x - 5 & \end{cases}$$

$$y = x + 2|x - 1| = \begin{cases} x + 2(x - 1) & ; \ x \geq 1 \\ = 3x - 2 & \\ x + 2(1 - x) & ; \ x < 1 \\ = -x + 2 & \end{cases}$$



புள்ளி A இன் x ஆள்கூறு காண

$$-2x-5=-x+2$$

$$-7=x$$

∴ வீச்சு $x > -7$

www.lkedu.lk

தாயங்கள்

எண்களின் செவ்வக ஒழுங்கு தாயம்.
பொதுவாக A, B, C, ... என்ற ஆங்கில பெரிய எழுத்துகளினால் குறிக்கப்படும்.

உ+ம்

$$A = \begin{pmatrix} 3 & 4 & -5 \\ 2 & 7 & 3 \end{pmatrix}$$

← 1ம் நிரை
← 2ம் நிரை

↑ 1ம் நிரல் ↑ 2ம் நிரல் ↑ 3ம் நிரல்

தாயம் A ஆனது 2 நிரையினையும் 3 நிரலினையும் கொண்டுள்ளது.

வரைவிலக்கணம்

தாயம் A ஆனது m நிரைகளையும் n நிரல்களையும் கொண்டிருப்பின் இத்தாயம் $m \times n$ வரிசை கொண்ட தாயம் என அழைக்கப்படும்.

$$A = \begin{pmatrix} a_{11} & a_{12} & a_{13} & \ldots\ldots\ldots & a_{1n} \\ a_{21} & a_{22} & a_{23} & \ldots\ldots\ldots & a_{2n} \\ a_{31} & a_{32} & a_{33} & \ldots\ldots\ldots & a_{3n} \\ a_{41} & a_{42} & a_{43} & \ldots\ldots\ldots & a_{4n} \\ \ldots\ldots & \ldots\ldots & \ldots\ldots & \ldots\ldots\ldots & \ldots\ldots \\ \ldots\ldots & \ldots\ldots & \ldots\ldots & \ldots\ldots\ldots & \ldots\ldots \\ a_{m1} & a_{m2} & a_{m3} & \ldots\ldots\ldots & a_{mn} \end{pmatrix}$$

$A = (a_{ij})_{m \times n}$ என எழுதப்படும்.

இங்கு $1 \leq i \leq m \quad i \in z$
$1 \leq j \leq n \quad j \in z$

மேலும் a_{ij} என்பது i வது நிரையில் j வது நிரலில் உள்ள மூலகம் ஆகும்.

www.lkedu.lk

நிரை தாயம் (நிரை காவி)

ஒரே ஒரு நிரையை மட்டும் கொண்டு தாயம் நிரை தாயம் ஆகும்.

அதாவது $A=(a_{ij})_{1\times n}$, $1 \le j \le n$, $j \in z^{+}$ என அமையும்.

<u>உ+ம்</u> $A=(3 \quad 4)_{1\times 2}$ $B=(5 \quad 2 \quad -1)_{1\times 3}$

நிரல் தாயம் (நிரல் காவி)

ஒரே ஒரு நிரலை மட்டும் கொண்ட தாயம் நிரல் தாயம் ஆகும்.

அதாவது $A=(a_{ij})_{m\times 1}$, $1 \le i \le m$, $i \in z$ என அமையும்.

<u>உ+ம்</u>

$$A=\begin{pmatrix}5\\4\end{pmatrix}_{2\times 1} \qquad B=\begin{pmatrix}1\\6\\7\\4\end{pmatrix}_{4\times 1}$$

சமமான தாயங்கள்

இரு தாயங்களின் வரிசைகள் சமமாகவும் ஒத்த மூலகங்கள் சமமாகவும் இருப்பின் அவை இரண்டும் சமமாகி தாயங்கள் ஆகும்.

அதாவது $A=(a_{ij})_{m\times n}$, $B=(b_{ij})_{m\times n}$ எனவும் இருக்கும் போது $A=B$ எனின், i , j இற்கு $(a_{ij})=(b_{ij})$ ஆகும்.

தாயங்களின் கூட்டம்

A, B என்பன ஒரே வரிசை உடைய தாயங்களாக இருக்கும் போது அவை கூட்டல் விருதிக்கு உட்படும்.

அதாவது தாயம் $A=(a_{ij})_{m\times n}$, $B=(b_{ij})_{m\times n}$ என்க.

$$\begin{aligned}A+B &= (a_{ij})_{m\times n} + (b_{ij})_{m\times n}\\ &= (a_{ij}+b_{ij})_{m\times n}\\ &= (C_{ij})_{m\times n}\\ &= C\end{aligned}$$

இங்கு $C_{ij}=a_{ij}+b_{ij}$ ஆகும்.

<u>உ+ம்</u>

$$A=\begin{pmatrix}3 & 1 & -2\\ 5 & 2 & 1\end{pmatrix}_{2\times 3} \qquad B=\begin{pmatrix}2 & -4 & 7\\ 2 & 8 & 9\end{pmatrix}_{2\times 3}$$

$$A+B=\begin{pmatrix}3+5 & 1+(-4) & -2+7\\ 5+2 & 2+8 & 1+9\end{pmatrix}_{2\times 3}$$

$$=\begin{pmatrix}8 & -3 & 5\\ 7 & 10 & 10\end{pmatrix}_{2\times 3}$$

www.lkedu.lk

தாயம் ஒன்றை எண்ணினால பெருக்குதல்.

$A=(a_{ij})_{m\times n}$ எனின், k என்பது ஒரு மாறிலியாக இருக்க $kA=(ka_{ij})_{m\times n}$ ஆகும்.

<u>உ+ம்</u>

$A=\begin{pmatrix}5 & 2\\ 4 & 7\end{pmatrix}$ எனின் $6A=\begin{pmatrix}6\times 5 & 6\times 2\\ 6\times 4 & 6\times 7\end{pmatrix}=\begin{pmatrix}30 & 12\\ 24 & 42\end{pmatrix}$ ஆகும்.

$B=\begin{pmatrix}2 & 4 & 3\\ -1 & 5 & -2\end{pmatrix}$ எனின் $-3B=\begin{pmatrix}-6 & -12 & -9\\ 3 & -15 & 6\end{pmatrix}$ ஆகும்.

பூச்சிய தாயம்

தாயம் ஒன்றின் எல்லா மூலகமும் பூச்சியம் எனின், அத்தாயம் பூச்சிய தாயம் என அழைக்கப்படும்.

அதாவது $A=(a_{ij})_{m\times n}$ இல் எல்லா i, j இற்கும் $a_{ij}=0$ என இருப்பின் அத்தாயம் பூச்சிய தாயம் ஆகும்.

<u>உ+ம்</u>

$0=\begin{pmatrix}0 & 0\\ 0 & 0\\ 0 & 0\end{pmatrix}_{3\times 2}$

தேற்றங்கள்

A, B, C என்பன $m\times n$ வரிசை கொண்ட தாயங்கள் ஆகவும் λ , μ எண்ணிகளாகவும் இருக்கையில்

1) $A+B=B+A$
2) $A+0=A$
3) $A+(B+C)=(A+B)+C$
4) $\lambda(A+B)=\lambda A+\lambda B$
5) $(\lambda+\mu)A=\lambda A+\mu A$
6) $\lambda\mu(A)=\lambda(\mu A)$

இங்கு 0, $m\times n$ வரிசை கொண்ட பூச்சிய தாயம் ஆகும்.

நிலைமாற்று தாயம்

$A=(a_{ij})_{m\times n}$ என்க. Aயின் நிலைமாற்று தாயம் A^T இனால் குறிக்கப்படும். Aயின் i ஆவது நிரை A^Tயில் i ஆவது நிரல் ஆகவும், Aயின் j ஆவது நிரல் A^T யில் j ஆவது நிரையாகவும் அமையும்.

அதாவது $A^T=A=(a_{ij})_{n\times m}$

<u>உ+ம்</u>

$A=\begin{pmatrix}3 & 2 & 5\\ 6 & 7 & 8\end{pmatrix}_{2\times 3}$ எனின் $A^T=\begin{pmatrix}3 & 6\\ 2 & 7\\ 5 & 8\end{pmatrix}_{3\times 2}$

www.lkedu.lk

தேற்றம்

A, B என்பன $m \times n$ வரிசை கொண்ட தாயங்கள் ஆகவும் λ மாறிலியாகவும் இருப்பின்

1) $(A^T)^T = A$

2) $(A + B)^T = A^T + B^T$

3) $(\lambda A)^T = \lambda A^T$ ஆகும்.

விசேட தாயங்கள்

சதுர தாயம்

தாயம் ஒன்றின் நிரைகளும், நிரைகளும் சமமாக இருப்பின் அவை சதுரதாயம் ஆகும்.

உ+ம் 2×2, 3×3, 4×4 வரிசை கொண்ட தாயங்கள் சதுர தாயம் ஆகும்.

$A=(a_{ij})_{m\times n}$

இதில் a_{ii} என அமையும் மூலகங்களைக் கொண்டவை முந்துறு மூலைவிட்டம் எனவும் $1 \leq i \leq n$, $i \in z$ (a_{11}, a_{22}, ..., a_{nn}). இதில் a_i, $n+1-i$ என அமையும் மூலகங்களை கொண்டவை துணை மூலைவிட்டம் எனவும் அழைக்கப்படும். (a_{n1}, a_{n+2}, a_{n-23}, a_{1n}).

சமச்சீர் தாயம்

A என்பது ஒரு சதுர தாயம் என்க. $A = A^T$ எனின், A சமச்சீர் தாயம் ஆகும். மேலும்

$A = (a_{ij})_{n\times n}$

$A^T = (a_{ji})_{n\times n}$ ஆகவும் இருக்க

$A = A^T$ எனின்

$a_{ij} = a_{ji}$

ஓராயச் சமச்சீர் தாயம்

A என்பது சதுர தாயம் என்க. $A = -A^T$ எனின், A ஆனது ஓராயச் சமச்சீர் தாயம் என அழைக்கப்படும். மேலும் $A = (a_{ij})_{n\times n}$

$A^T = (a_{ji})_{n\times n}$ ஆகவும் இருக்க

$A = -A^T$ எனின்

$a_{ij} = -a_{ji}$

$a_{ij} + a_{ji} = 0$ ஆகும்.

இதிலிருந்து முந்துறு மூலைவிட்டம் வழியே உள்ள மூலங்கள் யாவும் பூச்சியம் ஆகும். ($i = j$ இல்)

www.lkedu.lk

தாயங்களில் பெருக்கல்

A, B என்பன இரண்டு தாயங்கள். A இன் நிரல்களின் எண்ணிக்கையும் Bயின் நிரைகளின் எண்ணிக்கையும் சமமாக இருப்பின் AB பெருக்கம் வரையறுக்கப்படும்.

அதாவது $A = (a_{ij})_{m \times p}$ $B = (b_{ij})_{p \times n}$ எனவும் இருப்பின் AB பெருக்கத்தை வரையறுக்கலாம் $AB = C$ எனின் Cயின் வரிசை $m \times n$ ஆகும்.

$$c_{ij} = \sum_{k=1}^{p} a_{ik} b_{kj}$$

$$A = \begin{pmatrix} a_{11} & a_{12} \\ a_{21} & a_{22} \end{pmatrix}_{2 \times 2} \qquad B = \begin{pmatrix} b_{11} & b_{12} & b_{13} \\ b_{21} & b_{22} & b_{23} \end{pmatrix}_{2 \times 3}$$

$$AB = \begin{pmatrix} c_{11} & c_{12} & c_{13} \\ c_{21} & c_{22} & c_{23} \end{pmatrix}_{2 \times 3}$$

இங்கு $c_{11} = a_{11}b_{11} + a_{12}b_{21}$ $\quad c_{21} = a_{21}b_{11} + a_{22}b_{21}$

$c_{12} = a_{11}b_{12} + a_{12}b_{22}$ $\quad c_{22} = a_{21}b_{12} + a_{22}b_{22}$

$c_{13} = a_{11}b_{13} + a_{12}b_{23}$ $\quad c_{23} = a_{21}b_{13} + a_{22}b_{23}$

தேற்றங்கள்

$A = (a_{ij})_{m \times p}$ $B = (b_{ij})_{p \times q}$ $C = (c_{ij})_{q \times n}$ எனின்,

1) $A(BC) = (AB)C$
2) $A(B+C) = AB + AC$
3) $(B + C)A = BA + CA$
4) $(\lambda A)B = \lambda(AB) = A(\lambda B)$
5) $(AB)^T = B^T A^T$
6) $AO = OA = O$
7) பொதுவாக $AB \neq BA$
8) $AB = O \not\Rightarrow A = O$ அல்லது $B = O$

சதுர தாயம் ஒன்றின் நேர்மாறு

A என்பது சதுர தாயம் என்க. $AB = BA = I$ ஆகுமாறு தாயம் B உண்டு எனின், B என்பது A இன் நேர்மாறு என அழைக்கப்படும். அதாவது $B = A^{-1}$

www.lkedu.lk

மேல் முக்கோண தாயம்

சதுர தாயம் ஒன்றில் முந்துறு மூலைவிட்டத்துக்கு கீழ் உள்ள எல்லா மூலகங்களும் பூச்சியம் ஆகும்.

அதாவது A= $(a_{ij})_{m \times n}$ இல்

$i > j$ இற்கு $a_{ij} = 0$ ஆகும்

கீழ் முக்கோண தாயம்

சதுர தாயம் ஒன்றில் முந்துறு மூலைவிட்டத்து மேல் உள்ள எல்லா மூலகங்களும் பூச்சியம் ஆகும்.

அதாவது A= $(a_{ij})_{n \times n}$ இல்

$i < j$ இற்கு $a_{ij} = 0$ ஆகும்

மூலைவிட்ட தாயம்

சதுர தாயம் ஒன்றில் முந்துறு மூலைவிட்டத்துக்கு மேலும், கீழும் உள்ள மூலகங்கள் யாவும் பூச்சியம் எனின் அது மூலைவிட்ட தாயம் என அழைக்கப்படும்.

உ+ம்

$$\begin{pmatrix} 5 & 0 \\ 0 & 4 \end{pmatrix}_{2 \times 2} \qquad = \begin{pmatrix} 3 & 0 & 0 \\ 0 & 5 & 0 \\ 0 & 0 & -1 \end{pmatrix}_{3 \times 3}$$

எண்ணி தாயம்

மூலைவிட்ட தாயம் ஒன்றின் முந்துறு மூலைவிட்டம் வழியே உள்ள மூலகங்கள் யாவும் சமன் எனின், அது எண்ணி தாயம் ஆகும்.

உ+ம்

$$\begin{pmatrix} 2 & 0 \\ 0 & 2 \end{pmatrix}_{2 \times 2} \qquad = \begin{pmatrix} 5 & 0 & 0 \\ 0 & 5 & 0 \\ 0 & 0 & 5 \end{pmatrix}_{3 \times 3}$$

அலகு தாயம் / சர்வ சமன்பாட்டு தாயம் (I)

சதுர தாயம் ஒன்றில் முந்துறு மூலைவிட்டத்தின் வழியே உள்ள மூலகங்கள் யாவும் 1 ஆகவும் ஏனைய மூலகங்கள் யாவும் பூச்சியம் ஆகவும் இருப்பின் அத்தாயம் அலகு தாயம் ஆகும்.

உ+ம்

$$I_2 = \begin{pmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{pmatrix} \qquad I_3 = \begin{pmatrix} 1 & 0 & 0 \\ 0 & 1 & 0 \\ 0 & 0 & 1 \end{pmatrix}$$

www.lkedu.lk

தேற்றம்

A, B என்பன ஒரே வரிசை உடைய இரு சதுர தாயங்கள் ஆக இருக்க

1) $(A^{-1})^{-1} = A^{T}$

2) $(AB)^{-1} = B^{-1}A^{-1}$

3) $(AT)^{-1} = (A^{-1})^{T}$

2×2 தாயம் ஒன்றின் நேர்மாறு

$A = \begin{pmatrix} a & b \\ c & d \end{pmatrix}$ என்க. Aயின் நேர்மாறு $A^{-1} = \begin{pmatrix} p & q \\ r & s \end{pmatrix}$ எனின்

$A\,A^{-1} = D$

$\begin{pmatrix} a & b \\ c & d \end{pmatrix} \begin{pmatrix} p & q \\ r & s \end{pmatrix} = \begin{pmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{pmatrix}$

$ap + br = 1$ $\qquad$ $aq + bs = 0$

$cp + dr = 0$ $\qquad$ $cq + ds = 1$

$p = \dfrac{d}{ad - bc}$ $\qquad$ $q = -\dfrac{b}{ad - bc}$

$r = \dfrac{-c}{ad - bc}$ $\qquad$ $s = \dfrac{a}{ad - bc}$

இங்கு $ad - bc \neq 0$ ஆகும்.

$A^{-1} = \dfrac{1}{ad - bc} \begin{pmatrix} d & -b \\ -c & a \end{pmatrix}$

இங்கு $|A| = ad - bc$ ஆகும்.

$ad - bc \neq 0$ எனின், A^{-1} உண்டு

www.lkedu.lk

01. பின்வரும் தாயங்களின் det A (துணிதேற்றல்) ஐக் காண்க. அவற்றின் நேர்மாறு தாயங்களை எழுதுக. <u>உ+ம்</u>

$$A = \begin{pmatrix} a & b \\ c & d \end{pmatrix}_{2\times 2}$$

$\det A = ad - bc$

$\det A \neq 0$ எனின்

$$A^{-1} = \frac{1}{ad - bc}\begin{pmatrix} d & -b \\ -c & a \end{pmatrix}$$

a) $A = \begin{pmatrix} 2 & 3 \\ 4 & -5 \end{pmatrix}$

$\det A = -10 - 12$

$= -22$

$A^{-1} = \frac{1}{-22}\begin{pmatrix} 5 & -3 \\ -4 & 2 \end{pmatrix}$

b) $A = \begin{pmatrix} 4 & -1 \\ 4 & 1 \end{pmatrix}$

$\det A = 4 \times 1 - 4x(-1)$

$= 8$

$A^{-1} = \frac{1}{8}\begin{pmatrix} 4 & -1 \\ 4 & 1 \end{pmatrix}$

C) $A = \begin{pmatrix} 2+x & 1 \\ 4-x^2 & 2-x \end{pmatrix}$

$\det A = (2+x)(2-x) - (4-x^2)$

$= 4 - x^2 - 4 + x^2$

$= 0$

A^{-1} வரைறுக்க முடியாது.

d) $A = \begin{pmatrix} a & 2 \\ a - \frac{a^2}{2} & 2-a \end{pmatrix}$

$\det A = a(2-a) - 2\left(a - \frac{a^2}{2}\right)$

$= 2a - a^2 - 2a + a^2$

$= 0$

A^{-1} வரையறுக்க முடியாது.

02. $A = \begin{pmatrix} 2 & 3 \\ 4 & 5 \end{pmatrix}$ $B = \begin{pmatrix} \cos a & Sin a \\ -Sin a & \cos a \end{pmatrix}$ எனின்

A^2, B^2 ஆகியவற்றைக் காண்க.

$$A^2 = \begin{pmatrix} 2 & 3 \\ 4 & 5 \end{pmatrix}\begin{pmatrix} 2 & 3 \\ 4 & 5 \end{pmatrix} = \begin{pmatrix} 4+12 & 6+15 \\ 8+20 & 12+25 \end{pmatrix} = \begin{pmatrix} 16 & 21 \\ 28 & 37 \end{pmatrix}$$

$$B^2 = \begin{pmatrix} \cos a & Sin a \\ -Sa & \cos a \end{pmatrix}\begin{pmatrix} \cos a & Sin a \\ -Sa & \cos a \end{pmatrix}$$

$$B^2 = \begin{pmatrix} \cos^2 a - Sin^2 a & \cos a Sin a \\ -\cos a Sin a - \cos a Sin a & \cos^2 a - Sin^2 a \end{pmatrix}$$

$$= \begin{pmatrix} \cos 2a & Sin 2a \\ -Sin 2a & \cos 2a \end{pmatrix}$$

www.lkedu.lk

03. $A=\begin{pmatrix}4 & 3\\ 2 & 5\end{pmatrix}$ எனின் $A^2-9A+14I=0$ எனக் காட்டுக.

இதிலிருந்து A^{-1} ஐ காண்க.

$$A^2=\begin{pmatrix}4 & 3\\ 2 & 5\end{pmatrix}\begin{pmatrix}4 & 3\\ 2 & 5\end{pmatrix}=\begin{pmatrix}16+6 & 12+15\\ 8+10 & 6+25\end{pmatrix}=\begin{pmatrix}22 & 27\\ 18 & 31\end{pmatrix}$$

$$A^2-9A=\begin{pmatrix}22 & 27\\ 18 & 31\end{pmatrix}-\begin{pmatrix}36 & 27\\ 18 & 45\end{pmatrix}$$

$$=\begin{pmatrix}14 & 0\\ 0 & -14\end{pmatrix}$$

$$=-14\begin{pmatrix}1 & 0\\ 0 & 1\end{pmatrix}$$

$$=-14I$$

$$A^2-9A+14I=0$$

$$A^2-9A=-14I$$

$$A(A-9I)=-14I \qquad (A-9I)A=-14I$$

$$A\left(\frac{1}{-14}(A-9I)\right)=I \qquad \left(\frac{1}{14}(A-9I)\right)A=I$$

—(1) —(2)

(1), (2) $\Rightarrow$ $A^{-1}=\frac{1}{14}(A-9I)$

$$=\frac{1}{-14}\begin{pmatrix}4-9 & 3-0\\ 2-0 & 5-9\end{pmatrix}$$

$$=\begin{pmatrix}\frac{5}{14} & \frac{-3}{14}\\ \frac{-2}{14} & \frac{4}{14}\end{pmatrix}$$

04. $A=\begin{pmatrix}1 & \tan\theta\\ -\tan\theta & 1\end{pmatrix}$ உம் $AB=BA=I$ உம் எனின் $B=\cos^2\theta\, A^T$ எனக் காட்டுக. A^T என்பது A யின் நிலைமாற்று தாயம் ஆகும்.

$$B=A^{-1}=\frac{1}{(1+\tan^2\theta)}\begin{pmatrix}1 & -\tan\theta\\ \tan\theta & 1\end{pmatrix}$$

$$=\cos^2\theta\begin{pmatrix}1 & -\tan\theta\\ \tan\theta & 1\end{pmatrix}$$

$$=\cos^2\theta\, A^T$$

www.lkedu.lk

05. $A=\begin{pmatrix} ab & b^2 \\ -a^2 & -ab \end{pmatrix}$ எனின் $A^2=0$ தாயம் எனக் காட்டி $A^5=0$ உம் பூச்சிய தாயம் எனக் காட்டுக. இங்கு பூச்சியதாயத்தின் வரிசை 2×2 ஆகும்

$$A^2=A.A=\begin{pmatrix} ab & b^2 \\ -a^2 & -ab \end{pmatrix}\begin{pmatrix} ab & b^2 \\ -a^2 & -ab \end{pmatrix}$$

$$=\begin{pmatrix} a^2b^2-a^2b^2 & ab^3-ab^3 \\ -a^3b+a^3b & -a^2b^2+a^2b^2 \end{pmatrix}$$

$$=\begin{pmatrix} 0 & 0 \\ 0 & 0 \end{pmatrix}$$

$$=0_{2\times 2}$$

$$A^3=A^2.A$$

$$=0.A$$

$$=0$$

$$A^5=A^3.A^2$$

$$=0\times 0$$

$$=0_{2\times 2}$$

06. தாயம் $A=\begin{pmatrix} x & o \\ 2 & y \end{pmatrix}$ எனின் $A^2-3A+2I=0$ ஆகுமாறு A யிற்கு இரு தாயங்கள் உண்டு எனக்காட்டி அத்தாயங்களை எழுதுக.

